இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 322 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆனி 19 – வெள்ளிக்கிழமை 03 ஜூலை 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 322 : Thiruvalluvar Year - 2057 - Aani 19 - Friday 03 July 2026 - Trichy★★ 8 Pages ₹ 5.00

‘சைலன்டில்’ முதல்வர்! கண்டுகொள்ளாத அமைச்சர்!

## தமிழ்நாட்டில் அரிசி விலை கடும் உயர்வு!

### ஏழை, நடுத்தர மக்கள் அதிர்ச்சி!

சென்னை, ஜூலை 3 -

தமிழ்நாட்டில் அரிசி விலை கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.10 வரை அதிகரித்துள்ளது. பிரியாணிக்கு பயன்படுத்தப்படும் சீரக சம்பா அரிசி விலை மட்டும் ஓராண்டில் ரூ.96 எகிறியது. அரிசி விலை உயர்வு ஏழை, நடுத்தர மக்களை கடும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. தமிழகத்தை பொறுத்தவரை நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் தஞ்சை மாவட்டத்தில் நெல் விவசாயம் என்பது அதிக அளவில் நடைபெற்று வருகிறது.

அதே போல திருச்சி, நாகப்பட்டினம், ஆரணி, திண்டிவனம், ஈரோடு, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நெல் விளைச்சல் கணிசமாக இருந்து வருகிறது. இது போக ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்தும் ஆண்டுக்கு 30 லட்சம் டன் உயர் ரக சன்ன அரிசி தமிழகத்திற்கு விற்பனைக் காக கொண்டுவரப்படுகிறது. இந்த நிலையில் கர்நாடகாவில் சில இடங்களில் மழை இல்லாததால், உயர் ரக சன்ன நெல் விளைச்சல் பாதித்துள்ளது.

**சீரக சம்பா அரிசி விலை அதிரடி உயர்வு!**

அது மட்டுமல்லாமல் ஆந்திரா, தெலுங்கானாவில், கடந்த பருவத்தில் நெல் விளைச்சல் குறைந் துள்ளது. கோடை மழை மற்றும் தற்போதைய பருவ மழை கை கொடுக்காததால், கோடை மகசூலும், தற்போதைய குறுவை சாகுபடியும் பொய்த்து வருகிறது. தமிழக, கர்நாடகா அணைகளில் நீர் குறைவாக உள்ளதால், குறுவை சாகுபடியை உறுதி செய்ய முடியவில்லை. இதனால் தமிழகத்திலும் நெல் விளைச்சல் என்பது பாதிக்கப்பட்டுள்ளது. இது தவிர லாரி வாடகை கட்டணம் என்பது 25 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.



நெல் விளைச்சல் குறைவு, லாரி வாடகை கட்டணம் உயர்வு போன்ற காரணங்களால் அரிசி விலை தற்போது அதிரடியாக உயர தொடங்கியுள்ளது. அதாவது சாதாரண ரக அரிசி முதல் உயர்தர அரிசி வரை கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.10 வரை விலை உயர்ந்துள்ளது. இதில் உச்சகட்டமாக, பிரியாணி போன்ற உணவுகளுக்குப் பயன்படுத்தப்படும் சீரக சம்பா அரிசியின் விலை கடந்த ஆண்டு கிலோ ரூ.84 ஆக இருந்தது. இது தற்போது ரூ.180 ஆக கிடு,கிடுவென உயர்ந்துள்ளது. அரிசி தட்டுப்பாடு காரணமாக, சில்லரை விற்பனையில் ஏரியாவிற்கு தகுந்தாற் போல் கூடுதல் விலை வைத்தும் சிலர் விற்கின்றனர்.

அரிசியின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது நடுத்தர மற்றும் ஏழை எளிய மக்களைப் பெரும் கவலையில் ஆழ்த்தியுள்ளது. நெல் உற்பத்தி குறைவு மற்றும் இருப்பு பற்றாக்குறை காரணமாக, வரும் காலங்களிலும் அரிசி விலை மேலும் உயர வாய்ப்புள்ளதாகவும் வியாபாரிகள் எச்சரித்துள்ளனர். இது குறித்து அரிசி ஆலை உரிமையாளர்கள்கூறுகையில், “கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா மாநிலங்களில் இருந்து, அதிகளவில் சன்ன ரக நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. அந்த மாநிலங்களில், நெல் இருப்பு குறைவாக உள்ளது.

**அரசு உரிய நடவடிக்கை எடுக்க கோரிக்கை!**

இதனால் அங்குள்ள ஆலைகளின் தேவைக்கு போகவே, எங்களுக்கு நெல் தமிழகத்திற்கு கிடைக்கிறது. சில மாதங்களில், 1 கிலோ நெல்லுக்கு, 10 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது. இது தவிர லாரி வாடகையும் உயர்ந்துள்ளது. இதில், அதிகளவில் ஏற்றுமதியாகும் சீரக சம்பா அரிசி கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ரூ.84 ஆக இருந்தது. இது தற்போது, ரூ.180 என விற்கப்படுகிறது. ஓராண்டில் மட்டும் கிலோவுக்கு ரூ.96 வரை உயர்ந்துள்ளது.

வறட்சி, போதிய மழைப்பொழிவு இல்லாதது மற்றும் சன்ன ரக நெல் உற்பத்தி குறைவால் அரிசி விலை மேலும் அதிகரிக்கும்” என்றனர். இந்த அரிசி விலை உயர்வை கட்டுப்படுத்தவும், ஏழை எளிய மக்களுக்கு மேலும் சுமை ஏற்படுவதை தடுக்கும் வகையில் மலிவு விலையில் தரமான அரிசி தடையின்றி கிடைக்கவும் தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- சாதாரண ரக அரிசி முதல் உயர்தர அரிசி வரை கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.10 வரை விலை உயர்ந்துள்ளது.
- பிரியாணி போன்ற உணவுகளுக்குப் பயன்படுத்தப்படும் சீரக சம்பா அரிசியின் விலை கடந்த ஆண்டு கிலோ ரூ.84 ஆக இருந்தது. இது தற்போது ரூ.180 ஆக கிடு, கிடுவென உயர்ந்துள்ளது.
- அரிசியின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது நடுத்தர மற்றும் ஏழை எளிய மக்களைப் பெரும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.
- நெல் உற்பத்தி குறைவு மற்றும் இருப்பு பற்றாக்குறை காரணமாக, வரும் காலங்களிலும் அரிசி விலை மேலும் உயர வாய்ப்புள்ளதாகவும் வியாபாரிகள் எச்சரித்துள்ளனர்.

மக்களின் உயிர் காக்கும் மகத்தான மனித நேயத் தொண்டில்

## மருத்துவர்களின் அர்ப்பணிப்பைப் போற்றுகிறேன்!


### தேசிய மருத்துவர்கள் தினத்தையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, ஜூலை 3-

மக்களின் உயிர் காக்கும் மகத்தான மனித நேயத் தொண்டில் அர்ப்பணிப்போடு ஈடுபடும் மருத்துவர்கள் அனைவரையும் போற்றுகிறேன் என தேசிய மருத்துவர்கள் தினத்தை முன்னிட்டு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது முகநூல் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள முகநூல் பதிவு வருமாறு:-

மக்களின் உயிர்காக்கும் மகத்தான மனிதநேயத் தொண்டில் அர்ப்பணிப்போடு ஈடுபடும் மருத்துவர்கள் அனைவரையும் National Doctors Day இல் போற்றுகிறேன்.




இந்தியாவின் சிறப்பான மருத்துவக் கட்டமைப்பைத் தமிழ்நாடு கொண்டிருப்பதிலும், மருத்துவத் தலைநகராகத் திகழ்வதிலும் நம் மருத்துவர்களின் பங்கு தலையாயது.

NEET போன்ற சதிகளால் இதனைத் தகர்த்திடப் பார்க்கும் முயற்சிகளை வெற்றிகொள்ள இந்நாளில் உறுதியேற்போம்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

50 நாட்களில் 5 ஆணவப் படுகொலைகள்!

## மயிலாடுதுறையில் நெஞ்சை உலுக்கும் கொடூரம்!

### ‘சோஃபா மாடலின்’ ‘ரீல்ஸ்’ அரசு தூங்குகிறதா?

சென்னை, ஜூலை 3-

மயிலாடுதுறையில் நடந்த நெஞ்சை உலுக்கும் ஆணவக் கொலையோடு சேர்த்து த.வெ.க. ஆட்சிக்கு வந்த கடந்த 50 நாட்களுக்குள் மட்டும், தமிழ்நாட்டில் 5-க்கும் மேற்பட்ட கொடூரமான ஆணவப் படுகொலைகள் அரங்கேறியுள்ளன!

ஆனால், “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்று மேடைக்கு மேடை வசனம் பேசிய ‘சோஃபா மாடல்’ அரசு இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறது?

இதுபோன்ற கொடூரமான குற்றச் சம்பவங்களுக்கு எதிராக வாய் திறக்கச் சொன்னால், முதலமைச்சர் விஜய் அவர்கள் “பேசாமல் சாதிக்கிறேன்” என்று மௌன சாமியாராக நாடகம் ஆடுகிறார்!

தட்டிக் கேட்டால் கேமரா முன்னாடி சினிமா அடுக்கு மொழியில் ஏதேதோ வசனம் பேசுவது, சைகை செய்வது, அல்லது கூட்டணி கட்சியை ஏவிவிட்டு “அன்னைக்கு காலைல ஆறு மணிக்கு...” என்று எப்போதோ புளித்துப்போன, நடக்காத ஒரு பொய்யை மீண்டும் மீண்டும் பேச வைத்துத் திசை திருப்புவது... இதுதான் மாற்று அரசியலா?

நீதிபதி கே.என்.பாஷா ஆணையம் என்னவாயிற்று? “அனைத்து விதமான ஆதிக்கத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்து, சமத்துவச் சிந்தனையும் - சுயமரியாதையும் சூழ்ந்த மானுடத்தை உருவாக்க வேண்டும்” என்ற உயரிய நோக்கத்தோடு, ஆணவப் படுகொலைகளைத் தடுக்க முந்தைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தி.மு.க. அரசு, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி கே.என். பாஷா தலைமையில் ஒரு சிறப்பு ஆணையத்தை அமைத்தது.

பாதிக்கப்பட்ட பல குடும்பங்களும், சமூக செயற்பாட்டாளர்களும் தங்களது ஆவணங்களையும், சாட்சியங்களையும் அந்த ஆணையத்திடம் அளித்துள்ளார்கள்.

சமூக நீதியைப் பற்றி மேடையில் மட்டும் முழங்கும் ‘இன்ஸ்டா அரசன்’ விஜய் அவர்களே, முந்தைய தி.மு.க. அரசு அமைத்த அந்த ஆணையம் இப்போது என்னவாயிற்று?

அதன் அறிக்கை அடிப்படையில் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது த.வெ.க. அரசு?

எடுத்ததற்கெல்லாம் வாய் கிழியப் பேசும் நீங்கள், இதுபோன்று ஒடுக்கப்பட்ட மக்களின் உயிர் பறிக்கப்படும் போது மட்டும் மௌனம் சாதிப்பது ஏன்?

சமூக நீதியைக் காக்கத் துப்பில்லாத, நிர்வாகத் திறமையின்மையால் தமிழ்நாடு இன்று மீண்டும் இருண்ட காலத்திற்குச் சென்று கொண்டிருக்கிறது!

இனியும் மௌனம் சாதித்தால் தமிழ்நாட்டு மக்கள் உங்களை மன்னிக்க மாட்டார்கள்! என்று தி.மு.க. ஐ.டி. விங் கண்டனம் தெரிவித்துள்ளது.

குமரியில் அணுக்கனிமச் சுரங்கம் அமைக்க அனுமதி நீட்டிப்பு!

## த.வெ.க. அரசின் இரட்டை வேடம்!

### கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கடும் கண்டனம்!



**சென்னை, ஜூலை 3-**

**“கன்னியாகுமரி மாவட்டத்தில் அணுக் கனிம சுரங்கம் அமைக்க த.வெ.க. அரசு அனுமதியை நீட்டித்திருப்பது தென் மாவட்ட மக்களுக்கு செய்யும் மாபெரும் துரோகமாகும். “இது த.வெ.க. அரசின் இரட்டை வேடம்” என்று கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தமது சமூக வலைதளப் பதிவில் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

கன்னியாகுமரி மாவட்டம், மணவாளக் குறிச்சியில் செயல்பட்டு வரும் ஒன்றிய அரசின் இந்திய அரிய மணல் ஆலைக்கு, அணுசக்தி கனிமங்களை வெட்டியெடுப்பதற்கான கால அனுமதியை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து த.வெ.க. அரசு உத்தரவிட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தின் கிள்ளியூர் தாலுகாவுக்குட்பட்ட கீழ் மிடாலம், மிடாலம், இனயம் புத்தன்துறை, ஏழுதேசம் மற்றும் கொல்லங்கோடு ஆகிய 5 முக்கிய கடலோரக் கிராமங்களில், சுமார் 1,144 ஹெக்டேர் பரப்பளவில் அணு தாது மணல் (இல்மனைட், ருட்டைல், ஜிர்கான், மோனசைட்) வெட்டி எடுக்கும் நட வடிக்கைக்காக பூர்வாங்க பணிகளை மத்திய பொதுத் துறை நிறுவனமான ஐ.ஆர்.இ.எல். தீவிரப்படுத்தியது.

**கடலோர மக்களின் கடும் எதிர்ப்பு!**

இதற்கு தக்கலையில் உள்ள பத்மநாபபுரம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் கருத்து கேட்பு கூட்டம் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. கடலோர கிராம மக்களின் கடும் எதிர்ப்பு காரணமாக கருத்து கேட்பு கூட்டம் ரத்து செய்யப்பட்டிருந்தது. இதற்கிடையே இத்திட்டம் நாட்டின் வியூக முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கூறி, இதற்கான பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டங்கள் நடத்துவதிலிருந்து ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சகம் கடந்த 2025 ஜூலை மாதம் விலக்கு அளித்தது.

இதைதொடர்ந்து, இத்திட்டத்திற்கான இறுதி அனுமதியைப் பெறும் நோக்கில், ஐ.ஆர்.இ.எல். நிறுவனம் கடந்த மார்ச் 26 அன்று, ஒன்றிய அரசிடம் புதிய கடலோர ஒழுங்குமுறை மண்டல ஒப்புதல் கோரி விண்ணப்பித்தது. இத்திட்டம் முழுமையாக செயல்பாட்டுக்கு வந்தால், ஆண்டுக்கு 15 லட்சம் டன் அணு தாதுக்கள் வெட்டி எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சமீபத்திய ஒன்றிய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள அரியவகை கனிம வழித்தடங்கள் அமைக்கும் திட்டமும் இதற்குச் சாதகமாகப் பயன்படுத்தப்படலாம் என அஞ்சப்படுகிறது

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஹைட்ரோ கார்பன் திட்டம் மீனவர்களின் எதிர்ப்பால் ஆரம்பக் கட்டத்திலேயே முடங்கியுள்ள வேளையில், தமிழகத்தில் முதலமைச்சர் விஜய் தலைமையிலான த.வெ.க. கூட்டணி அரசு பொறுப்பேற்றுள்ள நிலையில், ஒன்றிய அரசுடன் இணக்கமான உறவு என்ற புதிய அணுகுமுறையை முன்னெடுத்துள்ளது. இந்நிலையில், கன்னியா குமரி மாவட்டம், மணவாளக்குறிச்சியில் செயல்பட்டு வரும் ஒன்றிய அரசின் இந்திய அரிய மணல் ஆலை அணுசக்தி கனிமங்களை வெட்டியெடுப்பதற்கான கால அனுமதியை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்து த.வெ.க. அரசு அதிரடியாக உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் இயற்கை வளங்கள் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள அரசாணையில், கன்னியாகுமரி மாவட்டம் கிள்ளியூர் தாலுகாவில் உள்ள பல்வேறு கிராமங்களில் தாது மணல் எடுப்பதற்காக ஒதுக்கப்பட்டிருந்த இடங்களுக்கான காலாவதி தேதியை நீட்டிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி, 1957ஆம் ஆண்டின் கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் கீழ் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**காலாவதி தேதி!**

கிள்ளியூர் தாலுகாவில் உள்ள கீழ்மிடாலம்ஏ, மிடாலம்பி, இனயம்புத்தன் துறை, எழுதேசம்ஏ, எழுதேசம்பி, எழுதேசம்சி, கொல்லங்கோடுஏ மற்றும் கொல்லங்கோடுபி ஆகிய கிராமங்களுக்கு உட்பட்ட மொத்தம் 1144.06.18 ஹெக்டேர் நிலப்பரப்பில் அணுசக்தி கனிமங்களை வெட்டியெடுக்க இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஐ.ஆர்.இ.எல் நிறுவனத்தின் கோரிக்கையையும், புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்குநரின் பரிந்துரையையும் ஏற்று, இந்த சுரங்க ஒதுக்கீடு காலத்தை 10.06.2027 வரை ஓராண்டு காலத்திற்கு நீட்டித்து தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது.

இதற்கான உத்தரவை தமிழக அரசின் முதன்மைச் செயலாளர் (பொறுப்பு) சுன்சோங்கம் ஜடக் சிரு பிறப்பித்துள்ளார். இந்த உத்தரவின் நகல்கள் கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர், இந்திய அணுசக்தித் துறை மற்றும் ஐ.ஆர்.இ.எல் நிறுவனத்தின் தலைமைப் பொது மேலாளர் ஆகியோருக்குத் தகுந்த நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. இந்த அனுமதி நீட்டிப்பின் மூலம் மணவாளக்குறிச்சி அரிய மணல் ஆலையின் உற்பத்திப் பணிகள் எவ்விதத் தடங்கலும் இன்றித் தொடர்வது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசின் இந்த நீட்டிப்பு உத்தரவை தொடர்ந்து, கடற்கரை மணல் அணு கனிம சுரங்க திட்டத்தை செயல்படுத்துவதற்கான கடலோர ஒழுங்குமுறை அனுமதியைப் பெறும் முயற்சியை ஐஆர்இஎல் மீண்டும் தீவிரப்படுத்தியுள்ளது. ஆனால் இந்த திட்டத்திற்கு கிள்ளியூர் மற்றும் சுற்றுவட்டார கடலோர கிராம மக்களிடையே நீண்ட காலமாக எதிர்ப்பு நிலவி வருவதால், அரசின் புதிய நீட்டிப்பு உத்தரவு மீண்டும் பொதுமக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

*** தவெக செயற்குழுவில் கண்டனமும்... தமிழ்நாடு அரசின் அனுமதியும்....**

தவெக மாநில செயற்குழு கூட்டம் 3.11.2024ல் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கன்னியாகுமரி மாவட்டத்தில் அணுக் கனிமங்களை அகழ்ந்தெடுக்கும் சுரங்கத் திட்டத்திற்கு எதிராகக் கடும் கண்டனம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதில், 21வது தீர்மானமாக ‘இயற்கைத் தாயின் செல்லப் பிள்ளையாகத் திகழும் கன்னியாகுமரி பகுதியில், அணுக் கனிமங்களை அகழ்ந்தெடுக்கும் சுரங்கத் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஒன்றிய அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது.

இயற்கை வளங்களைப் பாதுகாப்பதிலும், மக்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்வதிலும் த.வெ.க உறுதியாக இருக்கும் என்றும், சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்கும் இத்தகைய திட்டங்களை எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது என்றும் அக்கட்சியின் தலைமை தெரிவித்துள்ளது.

ஆனாலும் இந்தநிலையில் சுரங்க பணிகளுக்கான அனுமதியை ஓராண்டுக்கு நீட்டித்து தவெக அரசு ஆணை பிறப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.